# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் ஹாலந்திலுள்ள பைத்துந் நூர்
## பள்ளிவாயிலில் 18.05.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

இன்று அல்லாஹ்வின் அருளால் ஹாலந்து அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மாநாடு ஆரம்பமாகிறது. அல்லாஹ் மீண்டும் ஒருமுறை ஹாலந்து ஜல்ஸாவில் கலந்து கொள்ளும் வாய்ப்பினை எனக்கு வழங்கியுள்ளான். இந்த ஜல்ஸா அசல் நிகழ்ச்சி நிரலின்படி அடுத்த வாரம் நடைபெற வேண்டியது. ஆனால் நான் கலந்து கொள்ள விரும்பியதால் எனது நிகழ்ச்சியைப் பார்த்து அதற்கேற்ப ஒருவாரம் முன்னதாக இந்த நிகழ்ச்சியை வைத்து விட்டனர். குறுகிய காலத்திற்குள் இது அறிவிக்கப்பட்டுள்ளது. ஹாலந்து நிச்சயமாக ஒரு சிறிய நாடு ஆகும். ஜமாஅத்தும் கூட சிறியதுதான். மிக விரைவாக அனைவருக்கும் தகவல் வந்து விட முடியும். ஆனால் இருந்தும் கூட அவர்கள் தங்களது நிகழ்ச்சியில் மாற்றம் செய்துள்ளனர். மிகவும் எளிதாக செய்துள்ளார்கள். இந்த இடம் குறுகியது என்ற பிரச்சனை இருந்தது. வாடகைக்கு எடுக்கப்பட்டது. ஆனால் இந்த தேதிகளில் இடம் வாடகைக்கு கிடைக்கவுமில்லை.

எவ்வாறிருப்பினும் மிகச் சிறந்த முறையில் எல்லாம் அமைந்து விட்டது. ஆனால் சில செயல்ரீதியான பிரச்சனை உருவாகியிருக்கும். அல்லது உருவாகலாம். இதில் சிறிய கஷ்டங்களுடன் இங்கு கழிக்க நேரிடலாம். அத்தகைய நிலையிருந்தால் அந்த கஷ்டங்களை சகித்துக் கொள்ளுங்கள். முதலில் பணியாளர்கள் எல்லா வகையிலும் வசதி செய்து தருவதற்கு முழு முயற்சி செய்திருப்பார்கள் என்று நம்புகிறேன். அல்லாஹ்வின் அருளினால் உலகில் சிறு ஜமாஅத்தாக இருப்பினும் பெரிய ஜமாஅத்தாக இருப்பினும் ஜல்ஸா ஸாலானாவின் எல்லா ஏற்பாடுகளையும் மிகச் சிறப்பாக நிறைவேற்றுவதற்காக எல்லா இடத்திலும் சுயநலமற்ற தன்னலம் கருதாத பணியாளர்களின் குழு தயாராக இருக்கிறது. அவர்கள் மகிழ்ச்சியுடன் விருந்தாளிகளுக்கு தொண்டு செய்ய எப்போதும் தயாராக இருக்கின்றனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது விருந்தாளிகளுக்கு தன்னலமற்ற சேவை செய்வதற்கு அவர்கள் தயாராக இருக்கின்றனர். அல்லாஹ் இந்த எல்லா தொண்டர்களையும் வருங்காலத்திலும் எப்போதும் இந்த தன்னலமற்ற தொண்டு செய்யும் வாய்ப்பளிப்பானாக! ஏதாவது சிறு குறைகளைக் கண்டால் திரையிடுங்கள். ஜல்ஸாவில் கலந்து கொண்ட விருந்தினர்கள் குறைபாடுகளைப் பார்ப்பதற்குப் பதிலாக ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதன் அசல் நோக்கத்தின் பக்கம் கவனம் செலுத்துங்கள். இதுவே பைஅத்தின் நோக்கமாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அதனை விளக்கியுள்ளார்கள். பைஅத் செய்த பிறகு உலக விவகாரங்களில் மூழ்கி மனிதன் தனது அசல் நோக்கத்தை மறந்து விடுகிறான். எனவே இறைவன் மீண்டும் மீண்டும் அறிவுரை செய்வதை அவசியமாக்கியுள்ளான். இதனால் ஈமானுள்ள ஒவ்வொருவருக்கும் பயன் ஏற்படுகிறது.

அல்லாஹ் கூறுகின்றான்: ஃபஇன்னஸ் ஸிக்ர தன்ஃபவுல் மூஃமினீன் – நிச்சயமாக போதனை மூஃமின்களுக்கு பயனளிக்கிறது. இந்த ஜல்ஸா அறிவுரை செய்யவும் நினைவூட்டவுமே உலகில் எல்லா இடத்திலும் நடத்தப்படுகிறது. இந்த காலத்தின் இமாமின் பைஅத்தில் வந்த பிறகு மீண்டும் உங்கள் உடன்படிக்கையை நினைவில் கொள்ளுங்கள். உங்கள் பைஅத் உடன்படிக்கையை நினைவில் கொள்ளுங்கள். உலக வேலைகளால் சிறிது பலவீனம் ஏற்பட்டு விட்டாலும் மீண்டும் முதலிலிருந்து போதனைகளைக் கேட்டு, அறிவு ரீதியான, தர்பிய்யத் ரீதியான போதனைகள், அறிவுரைகள் மற்றும் சொற்பொழிவுகளைக் கேட்டு, பிறகு உங்கள் மார்க்க நிலைமையின் பக்கம் கவனம் செலுத்துங்கள். நீங்கள் ஒன்றாக அமர்ந்து நன்மைகளை ஈர்க்க முயலுங்கள். தீமைகளை அகற்றுங்கள் என்று கூறுவதற்காகவே எப்போதும் இந்த ஆண்டு மாநாடு நடத்தப்படுகின்றன.

நினைவில் கொள்ளுங்கள்! ஜல்ஸா நாட்களில் உங்கள் சொந்தப் பிரச்சனைகளில் கவனம் செலுத்த வேண்டாம். மாறாக, ஜல்ஸாவின் எல்லா நிகழ்ச்சிகளையும் கேட்கும்போதும் அதற்குப் பிறகும் துஆ மற்றும் திக்ரே இலாஹியில் மூழ்க வேண்டும். நாம் இந்த ஆன்மீக சூழலில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் தங்கி, நமது

பைஅத் உடன்படிக்கையை புதுப்பிக்கிறோம் என்று யோசித்தவாறு கழியுங்கள். அதன் மூலம் நமது ஈமான் மென்மேலும் உறுதிப்பட்டுக் கொண்டே செல்லட்டும்! அதன் மூலம் நாம் தக்வாவில் முன்னேற வேண்டும். இந்த நோக்கத்தை அடைவதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கீழ்க்கண்ட வழிகாட்டல்களைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

**அன்னார் கூறுகின்றார்கள்:**

பைஅத்தில் இணைந்துள்ள எல்லா தூயவர்களும் பைஅத் செய்வதன் நோக்கம் உலக ஆசை குளிர்ந்து விடுவதுதான் என்பது வெளிப்பட வேண்டும். எமது எஜமானர், ரஸூலே மக்பூல் (ஸல்) அவர்களுடைய முஹப்பத் உள்ளத்தில் மிகைக்க வேண்டும். மறு உலகப் பயணம் வெறுக்கத்தக்கதாக ஆகி விடாத அளவுக்கு உலகப் பற்றற்ற நிலை உருவாக வேண்டும். நாம் ஒவ்வொருவரும் நினைவில் கொள்ள வேண்டும். இந்த ஜல்ஸா நமக்கு இந்த நோக்கத்தை நிறைவேற்றும் வழியாக ஆக வேண்டும். மார்க்கத்திற்கு உலகத்தை விட முக்கியத்துவம் தர வேண்டும் என்ற சிந்தனை மென்மேலும் மெருகூட்டப்பட வேண்டும். அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் முஹப்பத் இந்நிலையில் தான் எல்லா முஹப்பத்தின் மீதும் மிகைக்க முடியும். அல்லாஹ் நம்மிடம் என்ன விரும்புகிறான் என்று தெரிய வேண்டும். ரஸூல் நம்மிடம் என்ன விரும்புகிறார்கள் என்று தெரிய வேண்டும். அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் என்ன விரும்புகிறார்கள் என்று தான் எங்களுக்கு தெரியுமே என்பதன்று. மாறாக அந்த விசயங்களை அறிந்து அமல் செய்வதும் அவசியமாகும்.

பிறகு அதனைப் பெற முழுமையான மற்றும் நிரந்தரமான முயற்சி செய்ய வேண்டும். இந்த விஷயங்களின் பக்கம் அமல் செய்யும் போதுதான் மறு உலகப்பயணம் வெறுக்கத்தக்கதாக இல்லாமல் இருக்கும். ஏதாவது ஒரு நாளில் ஒவ்வொரு மனிதனும் இவ்வுலகை விட்டு செல்ல வேண்டும். அல்லாஹ்வின் திருப்தி மற்றும் அவன் மீது முஹப்பத் வைத்திருக்கும் நிலையில் யார் இந்த உலகை விட்டு செல்கிறோமோ, அவர்களே நம்மில் பாக்கியசாலிகள் ஆவோம். இதனை ஒவ்வொருவரும் கவனத்தில் கொள்ள வேண்டும். மனிதன் நன்மைகளை மேற்கொள்ளவும் தீமைகளை விட்டு விடுவதில் கவனமும் தீவிரமாக உள்ளத்தில் ஏற்படுவதற்கும் ஒருநாள் இல்லாவிடில் ஒருநாள் இறைவன் முன் கொண்டு செல்லப்படுவோம் என்ற உறுதி வர வேண்டும். அங்கு நான் எனது அமல்களைப் பற்றி கேட்கப்படுவேன்.

**அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:**

நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வின் மீது தக்வாவை மேற்கொள்ளுங்கள். ஒவ்வொரு உயிரும் நாளைக்கு தாம் எதனை அனுப்பியுள்ளோம் என்பதில் கவனம் செலுத்த வேண்டும். மேலும் நீங்கள் அல்லாஹ்வின் மீது அச்சத்தை மேற்கொள்ளுங்கள். நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கறிகின்றான்.

எனவே அல்லாஹ் தெளிவாக இதனைக் கூறியுள்ளான். நீங்கள் கலப்பற்ற உள்ளத்துடன் அல்லாஹ்வுக்காகவே ஆகிவிடும் போதுதான் உங்கள் நம்பிக்கை முழுமையடையும். மேலும் தக்வாவையும் மேற்கொள்ளுங்கள். மறு உலகிற்காக நாம் என்ன அனுப்பியிருக்கிறோம் என்று அவர் பார்க்கும் போதுதான் இந்த தக்வா கிடைக்கும். உண்மையான நிரந்தர வாழ்விற்காக நாம் என்ன முயற்சி செய்துள்ளோம்? இவ்வுலகிற்காக மனிதன் பெரும் முயற்சி செய்கின்றான். மிகவும் சிரத்தையுடன் வேலை தேடுகிறான். தொழிலுக்காக உழைக்கிறான். சொத்து சேர்ப்பதற்காக உழைக்கின்றான். தமது பிள்ளைகளுக்கு உலகக் கல்வி வழங்குவதற்காக கவலையுடன் முயற்சி செய்கின்றான். உலக சுகங்களுக்காக பெரும் முயற்சி செய்யப்படுகிறது. இந்த உலக வேலைகளுக்காக இறைவன் மீது உறுதியான எண்ணம் கொண்ட ஒருவர் ஓரளவுக்கு துஆவும் செய்கிறார். அல்லது மற்றவரிடம் துஆ செய்யவும் சொல்கிறார். எனக்கு தினமும் இந்த உலக நோக்கங்களைப் பெறும் எண்ணற்ற கடிதங்கள் வருகின்றன. சிலர் உலக வேலைகளிலேயே மூழ்கிக் கிடக்கின்றனர். ஐவேளை தொழுகைகளையும் முழுமையாக தொழுவதில்லை. தொழுதாலும் வேகவேகமாக தொழுது விட்டு துஆக்கு மட்டும் மிகவும் உருக்கத்துடன் எழுதுகின்றனர். அதுவும் உலகப் பொருள்களைப் பெறுவதற்காகவே எழுதுகின்றனர். எவ்வாறிருப்பினும், இது குறித்து பின்னர் நான் கூறுவேன். துஆவுக்கு எவ்வளவு முக்கியத்துவம் உள்ளது என்று கூறுவேன்.

நான் கூற வந்ததாவது, மனிதன் உலக வேலைகளுக்காக நிறைய பணிகளைச் செய்கின்றான். ஆனால் ஓர் அஹ்மதி இக்காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டதாக வாதமும் செய்கின்றார். அவர்கள் மீண்டும் நம்மை இஸ்லாமிய போதனைகளால் ஒளியூட்டினார்கள் என்று வாதம் செய்கின்றனர். ஆனால் ஓர் அஹ்மதி முஸ்லிமிடம் இருக்க வேண்டிய தக்வாவின் உயர் தகுதியை அவர் பெறுவதில்லை – மரணத்திற்குப் பிறகு உங்கள் உலக முன்னேற்றங்கள் குறித்து கேட்கப்படும் என்று இறைவன் கூறவில்லை. மாறாக, தக்வாவை மேற்கொள்ளுங்கள் என்று கூறுகின்றான். நாளைக்காக – அந்த நாளைக்காக – உங்கள் மரணத்திற்குப் பிறகு ஆரம்பமாக உள்ள அந்த நாளைக்காக, அந்த நிரந்தர வாழ்விற்காக நீங்கள் என்ன அனுப்பினீர்கள் என்றுதான் கேட்பான். இந்த உலகின் வருமானம், இந்த உலகின் வங்கி இருப்பு, இந்த உலக சொத்துகள், சந்ததிகள், உறவினர்கள் அனைவரும் இங்கேயே இருப்பர். இவர்களைப் பற்றி இறைவன் எதுவும் கேட்கமாட்டான். அல்லாஹ் கேட்பதெல்லாம் எந்த நன்மைகளை செய்யுமாறு நான் கூறினோனோ அதில் எதனையெல்லாம் செய்தீர்கள். நாங்கள் என்ன நன்மைகளையெல்லாம் செய்வோமோ – எதனையெல்லாம் இறை திருப்தியைப் பெறுவதற்காக செய்திருப்போமோ, எந்தப் பணிகளை தக்வாவுடன் செய்தோமோ எந்த அளவுக்கு அல்லாஹ்வுக்குரிய உரிமையையும் அடியாருக்குள்ள உரிமையையும் நிறைவேற்றியுள்ளோமோ அதுவே இறைவனிடம் இருக்கும்.

அல்லாஹ் கூறுகின்றான்: உங்கள் பொருள்கள் என்னை வந்தடையாது. மாறாக தக்வாவே வந்தடையும். எனவே நீங்கள் இதனை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் எந்த அமலை செய்கின்றீர்களோ, அதில் அல்லாஹ்வுடைய உரிமையை நிறைவேற்ற வேண்டும் என்ற சிந்தனையுடன் செய்யப்பட்டதாக இருக்க வேண்டும். அல்லாஹ்வுடைய படைப்பினங்களின் உரிமையை நிறைவேற்ற வேண்டும் என்ற சிந்தனையில் செய்யப்பட்டதாக இருக்க வேண்டும். எந்த அமல் தூய தக்வாவுடன் செய்யப்பட்டதோ அந்த அமலை தான் அல்லாஹ் கூறுகிறான். நீங்கள் நாளைக்காக எதனை அனுப்பினீர்கள் என்று கேட்கிறான். அந்த அமல்தான் அல்லாஹ்விடம் கபூல் ஆவதற்கான தகுதியைப் பெறும். எதனை அல்லாஹ்வின் தக்வாவை கவனத்தில் கொண்டு ஓர் அடியான் செய்வானோ அதன் பிரதிபலனை அல்லாஹ்விடம் பெறுவார். அல்லாஹ்வை ஏமாற்ற முடியாது. அல்லாஹ் நமது ஒவ்வொரு அமலின் நிய்யத்தையும் குறித்து நன்கறிகிறான். இந்த அமலின் நமது நிய்யத் என்ன என்று பார்ப்பான்.

எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஒவ்வொரு செயலும் எண்ணத்தைப் பொறுத்தே முடிவு செய்யப்படும். நல்ல நிய்யத்தைக் கொண்ட அமலே அல்லாஹ்விடம் ஏற்றுக் கொள்ளத் தகுந்தது. அல்லாஹ்வின் தக்வாவை உள்ளத்தில் கொண்டவாறு செய்யப்பட்டதாக அது இருக்க வேண்டும். அல்லாஹ்வுக்கு செய்ய வேண்டிய கடமைகள் மிக முக்கியமானது தொழுகையாகும். தன் மீது ஈமான் கொண்ட பிறகு அடுத்த பணியாக தொழுகையை வைத்துள்ளான். ஆனால் இன்னோரிடத்தில் தொழுபவர்களையே மிகவும் எச்சரித்துள்ளான்.

கூறுகின்றான்: *ஃபவைலுல் லில் முஸல்லீன்* – தொழுகையாளிக்குதான்; அதாவது தொழுகையின் உரிமையை சரியாகப் பேணாத அந்த தொழுகையாளிகளுக்கு கேடு தான். அதாவது அவர்கள் தக்வா இல்லாமல் தொழுபவர்கள் ஆவர்.

அல்லாஹ் மறைவானவற்றை அறிபவனும், நன்கறிந்தவனும், அலீமும் ஆவான். எல்லா மறைவான விஷயங்களையும் அறிந்தவன். அவனுக்கு ஒவ்வொருவரின் விஷயம் குறித்தும் இல்ம் உண்டு. அவன் நிய்யத்தையும் நன்கு அறிகிறான். தக்வா இல்லாத தொழுகைகளை திருப்பித் தந்து விடுகின்றான். எனவே நாம் ஒவ்வொருவரும் மிகவும் உள்ளச்சத்துடன் தொழுவதற்கு முயற்சிக்க வேண்டும். ஏனெனில் அல்லாஹ் தொழுகைகளை நமது வாழ்வின் நோக்கமாக்கி உள்ளான். அந்த நோக்கத்தை நிறைவேற்றவும் அதிகமதிகள் முயற்சி செய்ய வேண்டும்.

அல்லாஹ் கூறுகிறான்: நான் மனிதனையும் ஜின்னையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: தொழுகை இபாதத்தின் சராம்சமாகும்.

நான் ஏற்கனவே கூறியது போன்று, உலகவாதி உலகத்தை சம்பாதிக்க எவ்வளவு முயற்சி செய்கிறான்? எவ்வளவு உழைக்கிறான்? எவ்வளவு சிரமங்களை மேற்கொள்கிறார்? தமது உடல் ஆரோக்கியத்தை கெடுத்துக் கொள்ளும் அளவுக்கு கவலைப்படுகிறார். உலகப்பொருள் மற்றும் சொத்துக்கு நஷ்டம் ஏற்பட்டால் சிலருக்கு மாரடைப்பு வந்து விடுகிறது. சிலர் நஷ்டத்தைப் பார்க்கும் போது பிணியுற்று வாழ்நாள் முழுவதும் நோயாளியாகி விடுகின்றனர். இந்த உலக வாழ்விற்காக இவை அனைத்தும் நடைபெறுகின்றன. நல்ல ஆக்டிவான செயல் திறனுள்ள வாழ்வு மனிதனுக்கு அதிகபட்சம் 60-70 வருடங்கள் கிடைக்கின்றன. அதற்குப் பிறகு உள்ள வாழ்வு பொதுவாக ஆக்டிவ் ஆக இருப்பதில்லை. பிறகு பொதுவாக பிள்ளைகள் அல்லது மற்றவரது கருணையில் வாழ வேண்டியது வருகிறது. இந்த நாடுகளில் சந்ததிகளும் கூட அவர்களை பராமரிப்பதில்லை. பெரும்பாலானவர்கள் முதியோர் இல்லங்களுக்கு அனுப்பப்படுகின்றனர். வாரம் ஒருமுறை பிள்ளைகள் போய் பார்க்கின்றனர். அதையே மாபெரும் கருணை காட்டி விட்டோம் என்று நினைக்கின்றனர். யாரும் அவர்களை ஏன் என்று கேட்பதில்லை? அவர்களுக்கு ஆக வேண்டிய அனைத்தும் நர்ஸ்கள் தயவில் நடக்கிறது. இந்த வயதை அடைந்த பிறகு இவர்களுக்கு இறை இருப்பின் உறுதி ஏற்படுகிறது. இறைவனின் எண்ணம் அதற்குப் பிறகுதான் வருகிறது. அப்போது சிலருக்கு மறு உலக வாழ்வு பற்றிய சிந்தனை பிறக்கிறது. நல்ல முடிவு கிடைப்பதற்காக துஆ செய்கின்றனர். துஆ செய்யச் சொல்கின்றனர். ஆனால் உண்மையில் இந்த அளவுக்கு வயது முதிர்ந்து விடும் முன்பே நல்ல முடிவுக்காக கவலைப்படுபவரே உண்மையான மூஃமின் ஆவார்.

தமது வாழ்வின் அடிப்படை நோக்கத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். தமது இபாதத்தின் ஹக்கை நிறைவேற்ற வேண்டும். உலக இன்பங்கள் அவரை இபாதத் செய்வதிலிருந்து கவனமற்றவராக ஆக்கக்கூடாது. தொழுகையிலிருந்து கவனமற்றவர்களாக்கக் கூடாது. அஹ்மதி குடும்பங்களின் மீது அல்லாஹ்வின் பெரும் கருணையால் பொதுவாகவே கணவன் – மனைவி இருவரில் ஒருவர் இறை வணக்கத்தில் கவனமற்றவராக இருந்தால் மற்றவர் அவருக்கு கவனமூட்டுகிறார். பலர் சந்திப்புகள் மூலமாகவும், கடிதம் மூலமாகவும் என்னிடம் கூறுகின்றனர். எங்கள் கணவர் அல்லது மனைவிக்காக துஆ செய்யுங்கள். அவர்களுக்கு தொழுகையில் கவனமில்லை. அவர்களுக்கு தொழுகையில் கவனம் ஏற்பட வேண்டும் என்று எழுதுகின்றனர். பொதுவாக பெண்கள் என்னிடம் அதிகமாக இதனைக் கூறுகின்றர். பெண்களுக்கு தொழுகையில் கவனம் அதிகம் உள்ளது என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். அதன் விளைவாக குழந்தைகளிடமும் கவனம் ஏற்படும் என்று எதிர்பார்க்கலாம். அவர்கள் சரியான தர்பிய்யத் செய்ய முடியும் என்று எதிர்பார்க்கலாம். அதே வேளையில் ஆண்கள் கவ்வாம் ஆக்கப்பட்டுள்ளனர். வீட்டின் கண்காணிப்பாளரக ஆக்கப்பட்டுள்ளனர். அவர் தொழுகையில் சோம்பேறியாக இருக்கிறார் என்பது கவலைக்குரிய விஷயமாகும். வீட்டின் நிர்வாகம், பொறுப்பு அவரிடம் இருக்கும்போது அவர் வீட்டினருக்கு முன்மாதிரியாக இருந்திருக்க வேண்டும். இன்னும் கூறுவதாயின், முன்மாதிரியாக இருப்பது அவசியமாக்கப்பட்டுள்ளது. அவர் தனது வாழ்வின் இந்த நோக்கத்தை நிறைவேற்ற முயற்சி செய்யவில்லையெனில் சந்ததிகள் அவரிடமிருந்து என்ன முன்மாதிரி பெறுவர்? எதார்த்தனமான நிலையில் அது நடக்கவும் செய்கிறது. பெரிய பிள்ளைகள் வாலிப வயதை அடையும்போது, தந்தை தொழா விட்டால் நான் மட்டும் ஏன் தொழ வேண்டும்? என்று கூறுகின்றனர். தாய் தொழுகையின் பக்கம் கவனமூட்டினாலும் பிள்ளைகள் கவனம் செலுத்துவதில்லை.

தொழுகை இபாதத்தின் சாராம்சமாக உள்ளது. அதனை நிறைவேற்றும் வழியாவது, பள்ளிவாசல் அல்லது தொழுகை மையங்கள் வீட்டை விட்டு வெகு தூரத்தில் இருந்தால் வீடுகளில் தொழுகையை ஜமாஅத்துடன் தொழுதிருக்க வேண்டும். தொழுகையின் பரக்கத்தால் வீடு நிரம்பவும், இறையருள் இறங்கவும் இதனை செய்ய வேண்டும். ஆண்களுக்கு குறிப்பாக தொழுகையை நிலைநாட்டுமாறு கட்டளை உள்ளது. தொழுகையை நிலைநாட்டுதல் என்பதன் பொருள் மிகக் கடும் நிர்பந்தம் இருந்தால் தவிர தொழுகையை ஜமாஅத்துடனே தொழ வேண்டும்.

எனவே இங்கு ஜல்ஸாவின் மூன்று நாட்களிலும் நமது ஆன்மீக, அறிவிப்பூர்வ, நல்லொழுக்க முன்னேற்றத்திற்கான நிகழ்ச்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் பெரும்பாலார் தஹஜ்ஜுத் தொழுவதிலும் கவனம் செலுத்துகின்றனர். ஃபஜ்ர் தொழுகைகளையும் ஜமாஅத்துடன் தொழுகின்றனர். அதனை வாழ்வின் நிரந்தர அங்கமாக்க உறுதி எடுங்கள். அப்போதுதான் தக்வாவின் முக்கிய அம்சத்தின் பக்கம் சென்றவர்கள் என்று

அழைக்கப்படுவீர்கள். அப்போதுதான் ஜல்ஸாக்கள் நடத்தப்படும் நோக்கத்தை நிறைவேற்றியவர்களாவோம். ஜல்ஸாவைப் பற்றி அறிவிப்பு செய்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். அதில் தக்வாவின் முன்னேற்றத்தின் பக்கம் கவனம் செலுத்துதல், அதற்காக முயற்சி செய்தல் ஆகியவற்றை முக்கியமானதாக ஆக்கியுள்ளார்கள்.

**ஜல்ஸாவின் முக்கியத்துவம் குறுத்து கூறுகின்றார்கள்:**

உள்ளம் மறுமையின் பக்கம் முற்றிலுமாக குனிந்து விட வேண்டும். ஜல்ஸாவில் கலந்து கொள்பவர்களுக்கு இறையச்சம் உருவாக வேண்டும். மனத்தூய்மை, தக்வா, இறையுணர்வு, தீமையை விட்டு விலகுதல், மென்மையான உள்ளம், பரஸ்பரம் அன்பு, சகோதரத்துவம் ஆகியவற்றில் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக விளங்க வேண்டும். தன்னடக்கம், நம்பிக்கை, இறையச்சம் அவர்களிடம் உருவாக வேண்டும். மார்க்க காரியங்களில் ஆர்வத்தைக் காட்ட வேண்டும்.

இதில் முதலாவதாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், மறுமையின் பக்கம் முற்றிலுமாக குனியுங்கள் என்று கூறியுள்ளார்கள். இதுவே திருக்குர்ஆனின் கட்டளையாகும். நாளைக்காக எதனை நீங்கள் அனுப்பியுள்ளீர்கள்? என்று பாருங்கள். இந்த உலக கவலைக்குப் பதிலாக மறுமையைப் பற்றி அதிகமாக கவலைப்படுங்கள். இந்த நிலை தக்வா இருந்தால் தான் பிறக்க முடியும். தக்வா இருந்தால் இதே விஷயம் இறை உணர்வின் பக்கம் திருப்பும். அங்கு அல்லாஹ்வின் கடமையும் நிறைவேற்றப்படும். அடியாரின் கடமையும் நிறைவேற்றப்படும். அதற்காக முயற்சி செய்யப்படும். அது மிக அவசியமானதாக கூறப்பட்டுள்ளது. அடியாருக்குள்ள கடமையை நிறைவேற்ற பரஸ்பரம் அன்பு, சகோதரத்துவம் ஆகியவற்றை உள்ளத்தில் உருவாக்குங்கள். பிறகு பரஸ்பரம் அன்பு, சகோதரத்துவம் உருவாவது மட்டுமின்றி சமுதாயத்திலும் அதன் நல்ல தாக்கம் ஏற்பட வேண்டும். உங்கள் தன்னடக்கம், உருக்கம், நன்மை, பிறர் நலம் பேணல் ஆகியவை உங்களிடம் இருப்பதைப் பார்த்து உலகம் இவர் அஹ்மதி என்று கூற வேண்டும். மற்றவரை விட்டு தனிப்பட்டு தெரிய வேண்டும். அல்லாஹ்வுக்குரிய உரிமை, அடியாருக்குள்ள உரிமையை வழங்குவதில் ஒருவர் முன்னுதாரணம் பார்க்க விரும்பினால் அஹ்மதிகளிடம் பாருங்கள் என்று பிறர் கூற வேண்டும்.

**பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மார்க்கக் காரியங்களில் ஆர்வம் காட்டுங்கள். மார்க்கக் காரியங்களில் மார்க்கத்தை பரப்ப பொருள் தியாகமும் செய்ய வேண்டியதுள்ளது. மஸ்ஜிதுகளைக் கட்டுவதில் கவனமும் முயற்சியும் கூட அடங்கும். தப்லீக் திட்டங்களும் அடங்கும். அந்த திட்டங்களுடன் ஓர் அஹ்மதி தனது நேரத்தை அர்ப்பணிப்பதும் உள்ளடங்கும். எனவே ஜல்ஸாவுக்கு வந்து பல்வேறு தலைப்புகளில் சொற்பொழிவுகளைக் கேட்டுள்ளோம். பல்வேறு சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படுகின்றன. அதனைக் கேட்டு நமது குறிக்கோளை அடைவதன் பக்கம் இங்கே அமர்ந்தவாறு கவனம் உருவாகிறது. அந்த சிந்தனை நிரந்தரமாக நமது வாழ்வின் அங்கமாக வேண்டும். இந்த ஜல்ஸாவில் கலந்து கொண்டுள்ள ஒவ்வொரு அஹ்மதியும் தனது இபாதத்தின் தகுதியை உயர்த்திக் கொள்கின்ற அதே வேளையில் இறைவனின் மற்ற உரிமைகளையும் நிறைவேற்ற வேண்டும். சமூகத்தின் உரிமைகளையும் நிறைவேற்ற வேண்டும். ஒருவருக்கொருவர் மனக்கசப்பு இருந்தால் ஜல்ஸாவின் பரக்கத்துகளால் அதனை அகற்றி விடுங்கள்.

இந்த ஜல்ஸாவில் கலந்து கொண்ட நோக்கத்தை அப்போதுதான் நிறைவேற்ற முடியும். எல்லா வகையான தீமைகளையும் அகற்றுவதற்கு உறுதி எடுங்கள்; அதற்காக முயற்சியும் செய்யுங்கள். இறை இருப்பையே மறுக்கிற பெரும்பாலரைக் கொண்ட இந்த நாட்டில் இருந்து கொண்டு – அம்மக்களோ உலகம் தான் எல்லாம் என்று கருதுகின்றனர். அதனைப் பெற இயன்ற அளவு முயற்சியும் செய்கின்றனர். இந்த சமுதாயத்தில் இருந்து கொண்டு மார்க்கத்தில் நிலைநிற்பது மார்க்கத்திற்காக தியாகம் செய்யத் தயாராக இருப்பது – தக்வாவின்படி நடக்க முயற்சி செய்வது மிகப்பெரும் வேலையாகும். எனவே இது ஒரு மூஃமினுக்கு மிகவும் முக்கியமானதாக்கப்பட்டுள்ளது. பலரைப் பார்க்கிறோம். இங்கு வந்து இந்த சாயத்தில் கலந்து மறைந்து விடுகின்றனர். பெரும்பாலாரின் செயல் உண்மையில் ஷய்த்தானிய செயல்களாக உள்ளன. அதாவது இங்கு

வசிக்கும் பெரும்பாலாரின் அமல் ஷய்த்தானிய செயல்களாக உள்ளது. புதிதாக வருபவர்களை அது கவருகிறது. புதிதாக வருபவர்களுக்கு ஒருவகையான தாழ்வு மனப்பான்மை இருக்கிறது. அவர்கள் நமது முன்னேற்றத்தின் இரகசியம் இதுதான். நாம் இம்மக்களின் பின்னால் செல்வோம். மார்க்கத்தைப் பின்தள்ளி விடுவோம். உலகிற்கு முன்னுரிமை தருவோம் என்று நினைக்கின்றனர். ஆனால் இதில் முன்னேற்றம் ஒன்றுமில்லை. மாறாக, இதில் அழிவு தான் உள்ளது.

அல்லாஹ் கூறுகிறான்: அல்லாஹ்வின் தக்வாவை மேற்கொள்ளுங்கள். அறிவற்றவர்களே! அப்போது தான் நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.

இங்கு வெற்றி தக்வாவை கடைபிடிப்பவருக்கே கிடைக்கும் என்கிறான். இன்னும் சொல்வதாயின், அவர்கள் தான் அறிவாளிகளும் ஆவர். இந்த மக்களோ தற்காலிக விருப்பங்களே எல்லாம் என்று நினைக்கின்றனர். உலக விருப்பங்கள் தான் எல்லாம் என்று நினைக்கின்றனர். இதனை மனதில் கொண்டு நிரந்தர வாழ்வை அழித்துக் கொண்டு விட்டனர். மார்க்கத்திற்கு உலகை விட அதிக முன்னுரிமை வழங்குபவர்களே அறிவாளிகளாவர். உலக வாழ்வே எல்லாம் என்று கருதியவர்கள், தமது நிரந்தர வாழ்வை அழித்து விட்டனர். நிரந்தர வாழ்வை அழித்துக் கொண்டவரை அறிவாளி என்று கூற முடியாது. சிறு விஷயங்களை பெரிய ஒன்றிற்காக தியாகம் செய்பவரே அறிவாளி ஆவார். எனவே அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக உலகை தியாகம் செய்வதே அறிவுடைமை ஆகும். எனவே ஒரு மனிதன், சரியான மூஃமின் இதனையே தனது வாழ்வின் நோக்கமாக கொள்ள வேண்டும். இந்த நோக்கத்தை எவ்வாறு பெற முடியும்?

அல்லாஹ் கூறுகிறான்: இந்த வேதம் – அதாவது திருக்குர்ஆன் இதனை நாம் இறக்கினோம். இது அருள் நிறைந்தது. இதனைப் பின்பற்றுங்கள். தக்வாவை மேற்கொள்ளுங்கள். அப்போது உங்கள் மீது கருணை காட்டப்படும்.

எனவே நாம் அல்லாஹ்வின் அருளுக்கு வாரிசாக வேண்டும் எனில் திருக்குர்ஆனின் கட்டளைகளைப் பின்பற்ற வேண்டும். அதனை இறைவன் நமக்கு அறிவுறுத்தியுள்ளான். இதை பின்பற்றுவது தான் நமக்கு தக்வாவின் வழியை அடையாளம் காட்டும்.

இறைவன் இதன் விளைவாக கூறுகிறான்: உங்கள் மீது இறைவன் கருணை காட்டுவான். அவனது கருணை முடிவடையாது; கருணை காட்டிக் கொண்டே செல்வான். ஏனெனில் முபாரக்கன் என்று வருகிறது. பரக என்பதன் பொருள் இறைவனின் புறமிருந்து கிடைத்தது மட்டுமின்றி ஒவ்வொரு வினாடியும் அதிகமாகிக் கொண்டே செல்கிற அருள் என்பதாகும். இது இறை கருணையாகும். அவனது திருப்தியைப் பெறுவதற்காக மனிதன் ஒரு நன்மை செய்தால் அதனை 10 மடங்கு ஆக்குவேன். அதுமட்டுமின்றி 700 மடங்கு அதிகமாக்குனே் என்கிறான். அதோடு மட்டும் முடிந்து விடாது. அதற்கு மேலும் என்னால் அதிகரிக்க முடியும். அதிகரிக்கவும் செய்கிறேன் என்கிறான்.

எனவே தக்வாவின்படி நடப்பவர் எத்தகைய நற்பலன்களை அனுபவிக்கின்றார் பாருங்கள். பிறகு ஒரு அமலுக்கு பல மடங்கு அதிகமாக நற்கூலி பெறுகிறார். அளவில்லாமல் பெறுகிறார். எனவே நம்மில் ஒவ்வொருவரும் இதனை பெற முயல வேண்டும். திருக்குர்ஆனின் கட்டளைகளைப் பின்பற்ற முயல வேண்டும். அப்போதுதான் நாம் உண்மையான தக்வாவின் படி நடப்பவர் என்று கூற முடியும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தக்வாவிற்கு விளக்கம் அளித்தவாறு ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

மனிதனின் எல்லா ஆன்மீக அழகுகளும் தக்வாவின் நுட்பமான வழிகளுள் அடியெடுத்து வைப்பதில்தான் உள்ளது. தக்வாவின் நுட்பமான வழிகள், ஆன்மீக அழகுக்கு நுட்பமான உயிர் ஆகும்.

இறைவனது அமானிதங்கள், ஈமானிய உடன்படிக்கைகளை முடிந்தவரை நடைமுறைப்படுத்துவது தலை முதல் பாதம் வரை எவ்வளவு உறுப்புகள் உண்டோ – சக்திகள் உண்டோ, வெளிப்படையாக

காணப்படுகின்ற கண், காது, கை, கால்கள், பிற உறுப்புகள் மற்றும் இதயம் மற்ற ஆற்றல்கள் ஒழுக்கங்கள் ஆகிய அனைத்தையும் முடிந்த வரை சரியான இடத்தில் பயன்படுத்தி, அனுமதியற்ற இடத்திலிருந்து தடுத்து வைத்தல், மேலும் அதன் மறைமுக தாக்குதல்களிலிருந்து எச்சரிக்கையாக இருப்பது இவைதான் அல்லாஹ்வின் ஹக்கை தருவதாகும். அல்லாஹ் தந்த அமானிதங்கள் அல்லாஹ்விடம் செய்த உடன்படிக்கைகள் ஆகியவற்றை எப்போதும் நிறைவேற்ற முயல வேண்டும். எல்லா உறுப்புகளாலும் அதனை நிறைவேற்ற வேண்டும். இறைவன் கட்டளையிட்ட செயலைத்தான் கைகள் செய்ய வேண்டும். எல்லா தீய வேலைகளில் இருந்தும் விலகவும் வேண்டும். கால்கள் இறைவன் செய்யச் சொன்ன வேலைகளை மட்டும் செய்ய வேண்டும். மஸ்ஜிதை நோக்கி ஒருவர் வைக்கிற ஒவ்வோர் அடி பற்றியும் ஹதீஸில் வருகிறதல்லவா? பள்ளிவாசலின் பக்கம் எடுத்து வைக்கப்படும் ஒவ்வொரு அடிக்கும் நற்பலன் தரப்படுகிறது. எனவே உலகாதயங்களை விட்டு விட்டு மஸ்ஜிதை நோக்கி வைக்கப்படுகின்ற ஒவ்வொரு அடியும், தொழுவதற்காக வைக்கப்படுகின்ற ஒவ்வொரு அடியும் அல்லாஹ்வுக்கு செய்யும் கடமையாகும். இதுபோன்று மறைமுகமாக உள்ள அனைத்து ஆற்றல்களின் ஹக்கையும் நிறைவேற்ற வேண்டும். அல்லாஹ்வுக்காக அதனைப் பயன்படுத்த வேண்டும். ஷய்த்தான் தாக்கும் போது அதிலிருந்து தப்பவும் முயற்சிக்க வேண்டும்.

கூறுகின்றார்கள்: மறைமுக தாக்குதலிலிருந்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஷய்த்தான் எவ்வாறு நம்மிடம் தாக்க முடியும் என்று பார்க்க வேண்டும்.

கூறுகிறார்கள்: இதற்கு எதிரில் அடியாருக்குள்ள உரிமையை வழங்குவதற்கும் தயாராக இருக்க வேண்டும். அல்லாஹ்வுக்குரிய கடமையை செய்த பிறகு அடியாருக்குள்ள உரிமையையும் கவனிக்க வேண்டும். மனிதனின் அனைத்து ஆன்மீக அழகு இந்த வழிமுறையுடன் தொடர்புடையதாகும். திருக்குர்ஆனில் அல்லாஹ் தக்வாவை ஆடை என்று கூறியுள்ளான். லிபாஸுத் தக்வா (தக்வா என்ற ஆடை) என்பது இறைவனது வார்த்தையாகும். ஆன்மீக அழகும் அணிகலனும் தக்வாவினாலேயே பிறக்கிறது. தக்வா என்பது மனிதன் இறைவனது எல்லா அமானிதங்கள், உடன்படிக்கைகள், படைப்பினங்களின் எல்லா அமானிதங்கள் மற்றும் உடன்படிக்கைளை முடிந்த வரை நடைமுறைப்படுத்துவதாகும். அவற்றின் நுட்பத்திலும் நுட்பமானவற்றையும் கடைபிடிக்க வேண்டும். அதாவது அல்லாஹ்விற்குரிய கடமைகள் அடியாருக்கு செய்ய வேண்டிய கடமைகளின் எல்லா பொறுப்புகளையும் அவற்றுள் நுட்பத்திலும் நுட்பத்தைக் கூட நிறைவேற்ற வேண்டும். வியாபாரிகள், வாழ்வின் அன்றாட விவகாரங்களில் வாக்குறுதி தருகின்றனர். ஒப்பந்தம் போடுகின்றனர். உடன்படிக்கை செய்கின்றனர். அதனை நிறைவேற்ற வேண்டும். அதனை கணக்குப் பார்த்து தந்து விட வேண்டும். மாணவர்கள் தமது படிப்பிற்குரிய கடமையை நிறைவேற்ற வேண்டும். அது போக அல்லாஹ்வுக்கு இபாதத்தின் ஹக்கை நிறைவேற்ற வேண்டும். எல்லா வகையான உரிமைகளையும் நிறைவேற்றுவதே தக்வா எனப்படும்.

**அன்னார் இன்னோரிடத்தில் கூறுகிறார்கள்:**

முத்தகி ஆவதற்கு பெரும் பெரும் விஷயங்களைக் காட்டுதல், பிறரை இழிவாகப் பார்த்தல், கருமித்தனம் ஆகியவற்றை விட்டு விலகுவதில் உறுதியாக இருக்க வேண்டும். தீய ஒழுக்கங்களை விட்டு விலக வேண்டும். பெரும் பெரும் பாவங்களிலிருந்து மனிதன் தப்பித்து விடுகிறான். செயற்கைத்தனம், கருமித்தனம், தற்பெருமை, காட்டுதல் ஆகிய அனைத்தையும் மனிதன் விட்டு விட வேண்டும்.

பிறகு எல்லா கீழான தீய ஒழுக்கங்களை விட்டு விலக வேண்டும். அவற்றிலிருந்து தப்பிப்பது மட்டுமின்றி அதற்குப் பதில் உயர்ந்த நல்லொழுக்கத்தின் முன்னேற வேண்டும். மக்களிடம் நல்லொழுக்கம் எவ்வாறு காட்டுவது? மக்களுடன், இனிமையாகப் பழகுதல், அனுதாபத்துடன் நடந்து கொள்ளுதல் இறைவனுடன் உண்மையான பற்று உண்மை ஆகிய பண்புகளை மேற்கொள்ளுதல், சேவையின் புகழுக்குரிய ஸ்தானத்தை தேடுதல், அதாவது அல்லாஹ்வின் ஹக்கை தருவதற்கும், மார்க்க சேவைக்காகவும் அதிகபட்ச முயற்சியை மேற்கொள்ள வேண்டும். அது பாராட்டத்தக்கதாக இருக்க வேண்டும். இந்த விஷயங்களால் மனிதன் முத்தகி என்று அழைக்கப்படுகின்றான். இந்த பண்புகளின் தொகுப்பாக விளங்குபவர்களிடம் இந்த அனைத்துப் பண்புகளுமே காணப்படுமோ அவரே முத்தகி ஆவார். அதாவது ஏதாவது ஒரு நற்பண்பு

காணப்பட்டால் அவர் முத்தகி ஆகமாட்டார். பல நன்மைகள் நல்லொழுக்கங்கள் பல்வேறு அஃமாலே சாலிஹாக்கள் உள்ளன. ஒருவரிடம் அவற்றில் ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று இருந்தால் மட்டும் அவர் முழுமையான முத்தகி என்று அழைக்கப்படமாட்டார்.

கூறுகின்றார்கள்: இந்த எல்லா பண்புகளும் ஒழுங்கமையப் பெற்றவரே முத்தகி ஆவார். எல்லா கீழான தீமைகளை விட்டு உயர்ந்த நல்லொழுக்கங்களை மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் அவரை முத்தகி என்போம். அங்கொன்றும் இங்கொன்றுமாக சில நற்பண்புகள் இருந்தால் அவரை முத்தகி என்று கூறமாட்டோம். உயர் நல்லொழுகக் அனைத்தும் அவரிடம் மொத்தமாக இல்லாத வரை முத்தகி என்று கூற முடியாது. அத்தகைய மக்களுக்காகவே லா கவ்ஃபுன் அலைஹிம் வலாஹும் யஹ்ஸனூன் (7:36) உள்ளது. அதற்குப் பிறகு அல்லாஹ் அவருக்கு பொறுப்பேற்றுக் கொள்கிறான். அதாவது அந்த நிலை அடைந்த மனிதனுக்கு எந்த பயமும் இருக்காது. கவலையும் இருக்காது. அல்லாஹ் அவருடன் இருக்கின்றான்.

ஒரு ஹதீஸில் வருகிறது: அல்லாஹ் பிடிக்கும் கையாகி விடுகிறான். அவர் பார்க்கும் கண்ணாகி விடுகின்றான். அவனது காதாகி விடுகின்றான். அதனால் அவர் கேட்கிறார். அவரது காலாகி விடுகிறான். அதனால் அவர் நடக்கிறார்.

இன்னொரு ஹதீஸில் வருகிறது: எனது நண்பரை பகைப்பவரிடம் என்னை எதிர்க்கத் தயாராக இருந்து கொள்! என்று இறைவன் கூறுகின்றான்.

ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: இறைவனது வலி உடன் தாக்குதல் தொடுப்பவரை ஒரு சிங்கத்திடமிருந்து அதனது குட்டியைப் பறிப்பவரை சிங்கம் எவ்வாறு தாக்குமோ அவ்வாறு இறைவன் தாக்குகிறான். இதுவே தக்வாவின் நிலையாகும். இதனைப் பெற நாம் முயற்சி செய்ய வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய முதல் மேற்கோளை வாசித்தேன். அதில் அவர்கள் கவனமூட்டியுள்ளார்கள். ஜல்ஸாவில் வந்து உங்கள் மார்க்கக் காரியங்களின் பக்கம் கவனம் செலுத்துங்கள். எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். நான் சுருக்கமாக முதலில் கூறிவிட்டேன். மார்க்கக் காரியங்கள், மார்க்கத்தின் தப்லீக், அதற்காக தியாகங்களைச் செய்ய வேண்டும். உங்களில் பெரும்பாலார் பாகிஸ்தானிலிருந்து ஹிஜ்ரத் செய்து இங்கு வந்தவர்கள் ஆவீர்கள். பாகிஸ்தானில் மார்க்கத்தைப் பரப்புவது தப்லீக் செய்வது ஒருபுறமிருக்கட்டும். மார்க்கத்தின்படி அமல் செய்யக்கூட அனுமதியில்லை. அதனால்தான் இங்கு வந்துள்ளீர்கள். தொழுகையை பகிரங்கமாக நிறைவேற்ற முடியாது. கலிமா எழுதுவதிலிருந்து நாம் தடுக்கப்படுகிறோம். அன்றாடம் நமது பள்ளிகளிலிருந்து கலிமாவை அழிக்க அரசாங்கத்தாரும் காவல்துறையினரும் மவ்லவிகளின் தூண்டுதலால் வருகின்றனர். இப்போது பெரிய நகரங்களில் பெரிய பள்ளிகளின் பக்கம் இவர்களின் பார்வை உள்ளது. எவ்வாறிருப்பினும், மார்க்க விஷயத்தில் அஹ்மதிகள் மீது நெருக்கடிகள் தரப்படுகின்றன. எனவேதான் உங்களில் பெரும்பாலார் இங்கு வந்துள்ளீர்கள். கடந்த சில காலத்திற்கு முன் தாய்லாந்திலிருந்து கணிசமான பாகிஸ்தான் குடும்பங்கள் இங்கு வந்துள்ளன. அங்கு பாகிஸ்தானியர்கள் சிக்கியிருந்தனர். அவர்களின் வழக்குகள் U.N.O. மூலமாக தீர்க்கப்பட்டது. தற்போது இங்கு அனுப்பப்பட்டுள்ளனர். இங்கு வந்தவர்களுள் சிலர் பாகிஸ்தானில் நெருக்கடியுடன் வாழ்ந்து வந்தனர். சிலர் சுற்றுப்புறத்தால் சிரமத்திற்கு ஆளாகியிருந்தனர். எவ்வாறிருப்பினும் நீங்கள் இங்கு வந்துள்ளீர்கள். இப்போது இங்கு நீங்கள் சுதந்திரமாக இருக்கிறீர்கள்.

எனவே பாகிஸ்தானில் வாழும் அஹ்மதிகளுக்காக வெளியில் வாழ்பவர்கள் நிறைய துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் விரைவில் அவர்களின் இந்த நாட்களை மாற்றுவானாக! அவர்களுக்கு மார்க்க சுதந்திரம் கிடைக்கட்டுமாக! இன்னொன்று பாகிஸ்தானுக்கு வெளியில் வாழும் அஹ்மதிகளுக்கு உள்ள பொறுப்பாவது அவர்கள் மார்க்க காரியங்களுக்காக முன்னால் வர வேண்டும். ஹாலந்து ஒரு சிறிய நாடாகும். இங்குள்ள ஓர் அரசியல்வாதி இஸ்லாத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்த முயன்றார். இங்கு அஹ்மதிகள் நிரந்தர திட்டத்துடன் தப்லீக் வேலைகளை விரிவுபடுத்தினால் இஸ்லாமிய எதிர்ப்பு உணர்வுகளை பெருமளவு அழித்து விட முடியும். அதுமட்டுமின்றி, இஸ்லாத்தின் சிறப்பை எடுத்து வைக்க வாய்ப்பும் கிடைக்கும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வருகையின் பெரும் நோக்கமாவது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கொண்டு வந்த ஷரீஅத்தைப் பரப்புவதாகும். அது திருக்குர்ஆனின் வடிவில் நம்மிடம் பாதுகாப்பாக உள்ளது. அந்த

தூதுச் செய்தியை உலகம் வரை கொண்டு செல்லும் பணியும் நம்முடையதே ஆகும். இது சம்பந்தமாக முழு முயற்சி வேண்டும். இங்கு அல்லாஹ்வின் அருளால் பல்வேறு சமுதாய மக்கள் வாழ்கின்றனர். அவர்களுள் அஹ்மதிகளும் உள்ளனர். இங்கு தப்லீகை துரிதப்படுத்தும் தேவை உள்ளது. இறை அருளால் உலகில் எப்பகுதியில் இதன் முக்கியத்துவத்தை உணர்ந்த மக்கள் இருக்கிறார்களோ அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வலுவான உதவியாளர்களாகி கிலாஃபத்திற்கு ஆதரவு அளித்து தப்லீக் பணியை விரிவுபடுத்தியுள்ளனர். அப்பகுதியில் ஜமாஅத்தின் அறிமுகம் இறை அருளால் ஏற்படுகிறது. நல்லியல்பு கொண்ட மக்களுக்கு அப்பகுதிகளில் ஜமாஅத்தின் பக்கம் கவனம் திரும்பியுள்ளது. பெருமளவில் ஏற்படுகிறது.

பலர் கூறுகிறார்கள்: இங்குள்ள மக்களுக்கு மார்க்கத்தில் ஆர்வம் இல்லை. ஐரோப்பாவின் பெரும்பாலான நாடுகளில் இதுதான் நிலையாகும். ஏன் மேற்கத்திய நாடுகளிலேயே இதுதான் நிலையாகும். முழு கிறித்தவ உலகிலும் இதுதான் நிலையாகும் என்று கூற வேண்டும். அதுமட்டுமல்ல. முஸ்லிம் நாடுகளிலும் பெயர்தாங்கி உலமாக்களுக்கும் மார்க்கத்தில் எந்த ஆர்வமும் இல்லை. அல்லாஹ்வின் மீது உறுதியில்லை. அவ்வாறு இருந்தால் அக்கிரமமும் அநீதியும் முடுக்கி விடப்பட்டுள்ளது போன்று உலமாக்களும் சரி. அவர்களின் பின்னால் செல்பவர்களும் சரி இவ்வாறு செய்திருக்க மாட்டார்கள. எனவே இம்மக்களுக்கு மார்க்கத்தில் ஆர்வமில்லை. இறைவன் மீது யகீன் இல்லை என்று கூறுகின்றனர். இறைவன் மீது யகீனை உருவாக்குவதும் தான் நமது வேலையாகும்.

அல்லாஹ் கூறுகின்றான்: திருக்குர்ஆனைப் பின்பற்றுங்கள். தக்வாவை மேற்கொள்ளுங்கள். நாம் உண்மையில் நமது ஒவ்வொரு அமலாலும் இந்த முழுமையான வேதத்தைப் பின்பற்றுபவர் ஆகி விட்டால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறிய முத்தகி ஆவதற்கான வரையறையில் வந்து விடுவோம். நமது முன்மாதிரியே தப்லீகின் வழியைத் திறக்கும். எவ்வாறிருப்பினும், இது கவனம் செலுத்த வேண்டிய விஷயமாகும். கவனம் செலுத்தினால் இன்ஷா அல்லாஹ் அல்லாஹ்வே நிலைமையை மாற்றி விடுவான். எனவே தப்லீகிற்கான வழியைத் தேடுவதற்கும் தக்வாவே நிபந்தனையாகும். அதன்படி செல்வதற்கு ஒவ்வோர் அஹ்மதிக்கும் தேவை உள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பைஅத்தின் கீழ் வந்து நாம் நம்முன் தூய மாற்றம் ஏற்படுத்துவதாக உறுதி எடுத்துள்ளோம். அதனை கவனத்தில் கொள்வது அவசியமாகும். நமது அமல் நமது முயற்சி நமது துஆக்கள் இவைதான் உலகிற்கு வழிகாட்டக் காரணமாக அமையும். அதுவன்றி இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஜமாஅத்தை தவிர உண்மையான இஸ்லாத்தை உலகின் முன் வைக்க வேறு ஒரு ஜமாஅத்தும் இல்லை. எனவே இந்த ஜல்ஸாவுக்கு வந்து ஒவ்வோர் அஹ்மதியும் இந்த மூன்று நாட்களில் தம்மை ஆய்வு செய்யும் தேவை உள்ளது. அதே வேளையில் இனி வருங்காலத்தின் இறைவனுக்குரிய ஹக்கை நிறைவேற்ற முயல்வோம் என்று உறுதி எடுக்கும் தேவையும் உள்ளது.

உங்கள் சகோதரரின் உரிமையை தருவதற்கும் முழுமையாக முயல வேண்டும். சமுதாயத்தின் ஹக்கை நிறைவேற்றவும் முழுமையாக முயற்சிக்க வேண்டும். இந்த நாட்டிற்குரிய ஹக்கை வழங்கவும் முழுமையாக முயற்சிக்க வேண்டும். இந்த நாடு நமக்கு சுதந்திரமாக வாழ வாய்ப்பளித்துள்ளது. இந்த கடமையை தப்லீக் மூலமே நிறைவேற்ற முடியும். இந்தக் கடமையை இஸ்லாத்தின் அழகிய போதனையைக் கொண்டு சேர்ப்பதன் மூலமே நிறைவேற்ற முடியும். இந்தக் கடமையை இஸ்லாத்தின் மீதுள்ள தப்பெண்ணங்களை களைவதன் மூலமே நிறைவேற்ற முடியும். எனவே எல்லா ஆண், பெண், வாலிபர் வயோதிகர் ஆகியோர் இக்கடமையை நிறைவேற்ற முயலுங்கள். அப்போதுதான் இதன் பக்கம் கவனம் ஏற்படும். அப்போது தான் புரட்சி ஏற்படும். துஆவில் மூழ்கியிருங்கள். அல்லாஹ் துஆவின் மூலமே அடையாளங்களைக் காட்டுகின்றான்.

மனிதனால் பொதுவாக தப்லீக் செய்ய முடியாத போது நாம் அல்லாஹ்வின் முன்னால் குனிவோம். ஒன்றுசேர்ந்து துஆ செய்வோம். பிறகு இறைவன் அடையாளங்களைக் காட்டுவான். அந்த அடையாளங்களே புரட்சிக்கான காரணமாகும். அல்லாஹ் எல்லாருக்கும் இதற்கான வாய்ப்பினை வழங்குவானாக! இந்நாட்களில் ஜல்ஸாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் தனது வாழ்வு, நேரம் அனைத்தையும் துஆவில்

கழிக்கும் வாய்ப்பினை அல்லாஹ் வழங்குவானாக! அனைவருக்கும் தூய மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளும் வாய்ப்பினை வழங்குவானாக!

ஜுமுஆவுக்கப் பிறகு நான் ஒரு ஜனாஸா காயிப் தொழுவேன். அது நமது மிகவும் பழைய தூய தொண்டராகிய கண்ணியத்திற்குரிய நாஸிர் அஹ்மது சாஹிப் உடையதாகும். இவர் முன்னால் முஹாஸிப் மற்றும் சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யா பாகிஸ்தானின் ஃபிராவிடன்ட் ஃபண்ட் ஆடிட்டர் மற்றும் ஆஃபீஸராகப் பணியாற்றியவர். மே மாதம் 13ம் தேதி அன்று நீண்ட நோயிற்குப் பிறகு தமது 74வது வயதில் மரணமடைந்தார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

மூட்டு வலியால் சில காலம் அவதிப்பட்டார். இவரது குடும்பம் சேக்குவான் குர்தாஸ் மாவட்டம் இந்தியாவைச் சேர்ந்ததாகும். மர்ஹூமின் தாதா இலாஹி பக்ஷ் சாஹிப் (ரலி) ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபியாக இருந்தார்கள. இவரது தந்தையார் மியான் சிராகுத்தீன் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களது கையில் பைஅத் செய்திருந்தார்கள். பிறகு செக்வானில் இருந்து காதியானுக்கு வந்தார்கள். நாஸிர் சாஹிப் 1938 -ல் காதியானில் பிறந்தார். தொடக்கக் கல்வியைக் காதியானில் பயின்றார். பாகிஸ்தான் ஹிஜ்ரத்திற்குப் பிறகு டி.ஐ. ஸ்கூல் சினியோட்டில் மெட்ரிக் தேர்ச்சி பெற்றார். பிறகு பி.ஏ. வரை கல்வி பயின்றார். ஜூன் 1956 -ல் சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவில் பல்வேறு துறைகளில் தொண்டராகப் பணிபுரிந்தார். கஸானா அலுவலகத்திலும் வஸிய்யத் அலுவலகத்திலும் பணி புரிந்தார். பிறகு அஃபீஸியில் செகரட்டரி மஜ்லிஸ் கார்பர்தாஸ் ஆக இருந்தார். பிறகு நாயிப் எடிட்டராக நியமிக்கப்பட்டார். 1993 முதல் 2008 வரை முஹாஸிப் மற்றும் ஃபிராவிடன்ட் ஃபண்ட் ஆஃபீஸராக தொண்டாற்றினார். நீண்ட காலமாக தஃப்தர் ஜல்ஸா ஸாலானா நாஸிம் ஆக இருந்தார். பல நண்பண்புகளும் ஒழுக்கங்களும் உடையவராக இருந்தார். முறையாக தொழுகைக்கு வருபவர் நோயுற்ற நிலையிலும் பள்ளிக்கு வந்தார். தஹஜ்ஜுத் தொழுபவர். துஆ செய்பவர். இனிய சுபாவமும் சிரித்த முகமும் உடையவர். விருந்தினர்களை உபசரிப்பவர். உடனிருப்பவர்களுடன் பரிவுடன் நடப்பவர். நினைவாற்றல் அதிகமுடையவர். முஹல்லாவில் நிறைய குழந்தைகளுக்கு திருக்குர்ஆன் கற்றுக் கொடுத்தார். கிலாஃபத்துடன் பேரன்பும் மதிப்பும் கொண்டிருந்தார். மூஸி ஆக இருந்தார். தமது வாழ்விலேயே சொத்துடைய விகிதாச்சாரங்களை வழங்கி இருந்தார். மனைவி தவிர அவரது ஞாபகமாக இரு மகன்கள் உள்ளனர். அல்லாஹ் மர்ஹூமடன் மக்ஃபிரத்திற்குரிய நடைமுறையைக் காட்டுவானாக! தனது திருப்தியின் ஜன்னத்தில் அவருக்கு உயரிய இடத்தை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

JUMUA KHUTBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUN NOOR MOSQUE, HOLLAND
ON 18.05.2012

Translated by : Muallim M. NIZAMUDEEN
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456